**<u>சுருக்கம்</u>**

பாசனம் – திருநெல்வேலி மாவட்டம், பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 164 குளங்களின் மதகுகள் மற்றும் களிங்குகளை ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் பழுது பார்த்து பராமரித்தல் – நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்புதல் அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>பொதுப்பணி (ப்பி2) துறை</u>**

**அரசாணை (டி) எண் 70** **நாள்: 28.02.2011**

திருவள்ளுவர் ஆண்டு 2042

மாசி 16

படிக்கப்பட்டவை:

1. தலைமைச் செயலாளர் கடித எண் 29229 / பொது 1 / 2010, பொதுத்துறை, நாள்: 6.9.2010.
2. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண் ஔ6 / 60571 / 2010, நாள்: 23.9.2010.
3. நீர்வள ஆதாரத் துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் கடித எண் தொநுபி / உபொ 1 / கோ 9979 / 1997, நாள்: 31.1.2001.
4. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, கடித எண் எஸ் 7 (4) / 56166 / 2001, நாள்: 9.2.2011.

********

**<u>ஆணை:</u>**

27.08.2010 மற்றும் 28.08.2010 ஆகிய இரண்டு நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மடைகளை பழுது பார்த்து பராமரிக்க ரூ.5.00 கோடி உடனடியாக அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது என மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

2. மேற்காணும் அறிவிப்பினைத் தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்டத்தில், பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள, பழுது பார்க்கப்பட வேண்டிய 164 குளங்களின் பட்டியலை, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் பின்வருமாறு அளித்துள்ளார்.

| வ. எண் | கோட்டத்தின் பெயர் | குளங்களின் எண்ணிக்கை | மொத்த மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | தாமிரபரணி வடிநிலக் கோட்டம், திருநெல்வேலி. | 73 | 220.00 |
| 2. | சிற்றாறு வடிநிலக் கோட்டம், தென்காசி. | 80 | 245.00 |
| 3. | கோதையாறு வடிநிலக் கோட்டம், நாகர்கோவில் (திருநெல்வேலி மாவட்ட எல்லைக்கு உட்பட்டவை) | 5 | 14.00 |
| 4. | மேல்வைப்பாறு வடிநிலக் கோட்டம், இராஜபாளையம் (திருநெல்வேலி மாவட்ட எல்லைக்கு உட்பட்டவை) | 6 | 21.00 |

| | | | |
|---|---|---|---|
| | மொத்தம் | **164** | **500.00** |

மேற்காணும் நான்கு கோட்டங்களுக்கு உட்பட்ட **164** குளங்கள் மற்றும் அவற்றின் கால்வாய்கள் மற்றும் அடைப்புப் பலகைகளை சீரமைக்க அரசு ஒதுக்கீடு செய்துள்ள ரூபாய் ஐந்து கோடி நிதியினை விரைவில் வழங்கிடுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**3.** திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவை, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் பரிந்துரை செய்துள்ளார். மேற்காணும் பழுது பார்க்கும் பணிகள் தொடர்பான மதிப்பீட்டின் சுருக்கத்தை பின்வருமாறு அளித்துள்ளதோடு, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவை, மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை பரிந்துரை செய்துள்ளார்.

| வ எண் | பணியின் விவரம் | | மதிப்பீட்டுத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | அடைப்புப் பலகை பொருத்துதல் | : | 1,07,86,800.00 |
| 2. | <u>மதகுகள்</u> | | |
| | (அ) மீளக் கட்டுதல் | : | 1,70,99,793.00 |
| | (ஆ) பழுது பார்த்தல் | : | 42,73,479.00 |
| 3. | <u>களிங்குகள்</u> | | |
| | அ) மீளக் கட்டுதல் | : | 10,81,000.00 |
| | ஆ) பழுது பார்த்தல் | : | 15,26,000.00 |
| 4. | பாதுகாப்புச் சுவர் அமைத்தல் | : | 1,42,10,752.00 |
| 5. | அனைத்து குளங்களுக்கான இதரப் பணிகள் | : | 10,22,176.00 |
| | மொத்தம் | : | 5,00,00,000.00 |

**4.** எனவே, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு மற்றும் நீர்வள ஆதாரத்துறை, முதன்மை தலைமைப் பொறியாளரின் பரிந்துரை ஆகியவற்றை பரிசீலனை செய்த பின்னர், அவற்றினை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள **164** குளங்களில் ரூ. **5.00** கோடி (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) மதிப்பீட்டில் அடைப்புப் பலகை பொருத்துதல், மதகுகள் மற்றும் களிங்குகளை மீளக் கட்டுதல் மற்றும் பழுது பார்த்தல் மற்றும் பாதுகாப்புச் சுவர் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

**5.** மேலே பத்தி **4**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படும்.

(i) **"2701** பெரிய, நடுத்தரப் பாசனம் **– 03** நடுத்தரப் பாசனம் **–** வணிகத்தன்மையுள்ளது **– 124** மணிமுத்தாறு திட்டப் பாசன ஏற்பாடு – I

திட்டத்தில் சேராதது – AA மணிமுத்தாறு திட்டம் **– 18** பராமரிப்பு – **01** குறித்த காலப் பராமரிப்பு ( த.தொ.கு **2701 03 124** AA 1815)''

(ii) ''**2701** பெரிய, நடுத்தரப் பாசனம் **– 03** நடுத்தரப் பாசனம் **–** வணிகத்தன்மையுள்ளது **– 145** கடானாத் திட்டப் பாசன ஏற்பாடு – I திட்டத்தில் சேராதது – AA கடானாத் திட்டம் **– 18** பராமரிப்பு – **01** குறித்த காலப் பராமரிப்பு (த.தொ.கு **2701 03 145** AA 1811)''

(iii) ''**2701** பெரிய, நடுத்தரப் பாசனம் **– 03** நடுத்தரப் பாசனம் **–** வணிகத்தன்மையுள்ளது **– 146** இராமாநதித் திட்டப் பாசன ஏற்பாடு – I திட்டத்தில் சேராதது – AA இராமாநதித் திட்டம் **– 18** பராமரிப்பு – **01** குறித்த காலப் பராமரிப்பு (த.தொ.கு **2701 03 146** AA 1819)''

(iv) ''**2701** பெரிய, நடுத்தரப் பாசனம் **– 03** நடுத்தரப் பாசனம் **–** வணிகத்தன்மையுள்ளது **– 148** கருப்பாநதித் திட்டப் பாசன ஏற்பாடு – I திட்டத்தில் சேராதது – AA கருப்பாநதித் திட்டம் **– 18** பராமரிப்பு – **01** குறித்த காலப் பராமரிப்பு (த.தொ.கு **2701 03 148** AA 1815)''

(v) ''**2701** பெரிய, நடுத்தரப் பாசனம் **– 03** நடுத்தரப் பாசனம் **–** வணிகத்தன்மையுள்ளது **– 160** குண்டாறு திட்டப் பாசன ஏற்பாடு – I திட்டத்தில் சேராதது – AA குண்டாறு திட்டம் **– 18** பராமரிப்பு – **01** குறித்த காலப் பராமரிப்பு (த.தொ.கு **2701 03 160** AA 1819)''

(vi) ''**2701** பெரிய, நடுத்தரப் பாசனம் **– 03** நடுத்தரப் பாசனம் **–** வணிகத்தன்மையுள்ளது **– 178** தாமிரபரணி அணைக்கட்டு பாசன ஏற்பாடு – I திட்டத்தில் சேராதது – AA தாமிரபரணி அணைக்கட்டு பாசன ஏற்பாடு **– 18** பராமரிப்பு – **01** குறித்த காலப் பராமரிப்பு (த.தொ.கு **2701 03 178** AA 1812)''

(vii) ''**2701** பெரிய, நடுத்தரப் பாசனம் **– 03** நடுத்தரப் பாசனம் **–** வணிகத்தன்மையுள்ளது **– 191** கொடுமுடியாறு திட்டப் பாசன ஏற்பாடு – I திட்டத்தில் சேராதது – AA கொடுமுடியாறு திட்டப் பாசன ஏற்பாடு **– 18** பராமரிப்பு – **01** குறித்த காலப் பராமரிப்பு (த.தொ.கு **2701 03 191** AA 1814)''

(viii) ''**2701** பெரிய, நடுத்தரப் பாசனம் **– 03** நடுத்தரப் பாசனம் **–** வணிகத்தன்மையுள்ளது **– 194** நம்பியாறு திட்டப் பாசன ஏற்பாடு – I திட்டத்தில் சேராதது – AA நம்பியாறு திட்டப் பாசன ஏற்பாடு **– 18** பராமரிப்பு – **01** குறித்த காலப் பராமரிப்பு (த.தொ.கு **2701 03 194** AA 1818)''

(ix) ''**2701** பெரிய, நடுத்தரப் பாசனம் **– 03** நடுத்தரப் பாசனம் **–** வணிகத்தன்மையுள்ளது **– 197** அடவிநயினார் கோவில் திட்டப் பாசன ஏற்பாடு – I திட்டத்தில் சேராதது – AA அடவிநயினார் கோவில் திட்டப் பாசன ஏற்பாடு **– 18** பராமரிப்பு – **01** குறித்த காலப் பராமரிப்பு (த.தொ.கு **2701 03 197** AA 1812)''

(x) ''**2701** பெரிய, நடுத்தரப் பாசனம் **– 03** நடுத்தரப் பாசனம் **–** வணிகத்தன்மையுள்ளது **– 198** வடக்கு பச்சையாறு திட்டப் பாசன ஏற்பாடு – I திட்டத்தில் சேராதது – AA வடக்கு பச்சையாறு திட்டப் பாசன ஏற்பாடு **– 18** பராமரிப்பு – **01** குறித்த காலப் பராமரிப்பு (த.தொ.கு **2701 03 198** AA 1810)''

(xi) ''**2702** சிறுபாசனம் **– 03** பராமரிப்பு **– 101** நீர்த் தொட்டிகள் – I திட்டத்தில் சேராதது – AH பாசன ஏற்பாட்டின் கீழ் வராத ஏரிகளை பராமரித்தலும்

பழுதுபார்த்தலும் **– 18** பராமரிப்பு – **01** குறித்த காலப் பராமரிப்பு (த.தொ.கு **2702 03 101** AH 1818)''

**6.** மேலே பத்தி **4**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை **2010–2011**ம் ஆண்டிற்கான இறுதித் திருத்த நிதியொதுக்கம் மற்றும் **2011–2012**ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், மேலே பத்தி **5–**ல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்புகளின் கீழ், அளிக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளுமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் **25.02.2011** நாளிட்ட அலுவல் சார்பற்ற எண் **590** / FS / P / 2011ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கி. தனவேல்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மதுரை மண்டலம், மதுரை–2.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி.
மாவட்ட கருவூல அலுவலர், திருநெல்வேலி.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (ஏ & இ), சென்னை–18
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (துணிக்கை 1) சென்னை–18
நகல்:
முதலமைச்சரின் செயலாளர், சென்னை–2
நிதி (பொ.ப II) துறை, சென்னை – 9.

**// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**